DECEMBER 2022

U/ID 22218/ UCZ2A/UCW2A/ UCY2A/UCV2A

Time : Three hours Maximum : 75 marks

SECTION A — ($10 \times 2 = 20$ marks)

Answer any TEN questions

1. What do you mean by Departmental accounting?
துறைவாரி கணக்கியல் என்பதன் பொருள் யாது?

2. What is interdepartmental transfer?
துறைகளுக்குள் மாற்றம் என்றால் என்ன?

3. State any two objectives of branch accounts.
கிளைக் கணக்கின் நோக்கங்கள் ஏதேனும் இரண்டினைக் குறிப்பிடுக.

4. What is profit sharing ratio?
லாப பகிர்வு விகிதம் என்றால் என்ன?

5. Who is an Insolvent?
நொடிப்பு நிலை அடைந்தவர் என்பவர் யார்?

6. What is Partial repossession?
பகுதி மீட்டெடுப்பு என்றால் என்ன?

7. Define Partnership.
கூட்டாண்மை வரையறு.

8. What is partnership deed?
கூட்டாண்மை ஒப்பாவணம் என்றால் என்ன?

9. Expand the term "DISSOLUTION".
"DISSOLUTION" என்ற பதத்தினை விரிவாக்கம் செய்க.

10. What do you mean by Dissolution by Agreement?
உடன்படிக்கையின் மூலம் கலைப்பு என்பதன் உனது பொருள் யாது?

11. What is proportionate capital method?
விகிதாச்சார முதல் முறை என்றால் என்ன?

12. How do you calculate sacrificing ratio of a partner?
கூட்டாளியின் தியாக விகிதம் எவ்வாறு கணக்கிடப்படுகிறது.

SECTION B — (5 × 5 = 25 marks)

Answer any FIVE questions

13. Compute opening branch debtors balance from the following transactions.

	Rs.
Credit sales	51,000
Cash received from debtors by the branch	42,500
Branch debtors (closing)	7,700
Discount allowed to customers by branch	1,800

பின்வரும் நடவடிக்கைகளைக் கொண்டு கிளையின் தொடக்க கடனாளிகள் இருப்பினை கணக்கிடுக.

	ரூ.
கடன் விற்பனை	51,000
கிளையின் கடனாளிகளிடமிருந்து பெற்ற ரொக்கம்	42,500
இறுதி கடனாளிகள்	7,700
கிளையின் வாடிக்கையாளருக்கு அளித்த தள்ளுபடி	1,800

14. A company has two departments A and B. Department A supplies goods to Department B at its usual selling price. From the following fitures prepare departmental trading account for the year 2002

	Rs.	Rs.
Opening stock	30,000	--
Purchases	2,10,000	--
Transfer to B	50,000	50,000
Sales	2,00,000	60,000
Closing stock	40,000	10,000

ஒரு நிறுமத்தில் இரண்டு துறைகளாக A மற்றும் B உள்ளன. துறை A சரக்குகளை துறைக்கு வழக்கமான விற்பனை விலையில் அனுப்புகிறது. பின்வரும் தொகைகளைக் கொண்டு துறைவாரி வியாபாரக் கணக்கினை 2002 ம் ஆண்டுக்கு தயார் செய்க.

	ரூ.	ரூ.
தொடக்க சரக்கிருப்பு	30,000	--
கொள்முதல்	2,10,000	--
B க்கு மாற்றம் செய்தது	50,000	50,000
விற்பனை	2,00,000	60,000
இறுதிச் சரக்கிருப்பு	40,000	10,000

15. An asset is purchased under hire purchase agreement which provides for five half-yearly instalments of Rs. 6,000 each, the first instalment being due on July 1, 2001. Assuming the applicable rate of interest is 10% p.a. calculate the cash value of the machine.

ஒரு சொத்து ஒன்றினை வாடகை கொள்முதல் உடன்படிக்கையின் கீழ் வாங்கப்பட்டது அதில் ஐந்து அரையாண்டுத் தவணைகளாக ரூ. 6,000 வீதம் செலுத்தக் கோரியது. முதல் தவணை 1.7.2001 ல் செலுத்தப்பட வேண்டும். அதன் வட்டி வீதம் ஆண்டுக்கு 10% எனில் இயந்திரத்தின் ரொக்க மதிப்பினைக் கணக்கிடுக.

16. What is the accounting treatment at the time of death of a partner?

ஒரு கூட்டாளி இறந்த பிறகு அந்த நேரத்தில் பின்பற்ற வேண்டிய கணக்கியல் நடவடிக்கைகள் யாது?

17. X, Y and Z are partners sharing profit in the ratio of 2 : 2 : 1. 'Y' dies on 31st March 2009. Accounts are closed on 31st December. Sales for the year 2008 amounted to Rs. 6,00,000. Sales of Rs. 2,00,000 amounted between the period of 2nd January 2009 and 31st March 2009. The profit for the year 2008 amounted to Rs. 60,000. Calculate the deceased partner's share in the profit of the firm.

X, Y மற்றும் Z ஆகியோர் கூட்டாளிகள் அவர்கள் லாபத்தின் 2 : 2 : 1 எனும் விகிதத்தில் பகிர்ந்து வந்தனர். 31.3.2009 ல் Y என்பவர் இறந்து விட்டார். கணக்குகள் 31 டிசம்பரில் முடிக்கப்பட்டது. 2008 ல் விற்பனைத்தொகை ரூ. 6,00,000. 2.1.2009 முதல் 31.3.2009 வரையிலான விற்பனை ரூ. 2,00,000. 2008 ம் ஆண்டின் லாபத் தொகை ரூ. 60,000. நிறும இலாபத்தில் இறந்த கூட்டாளியின் லாபத்தினைக் கணக்கிடுக.

18. The following balance sheet related to A, B and C as on 31.3.2005

Liabilities	Rs.	Assets	Rs.
Creditors	10,000	Cash at bank	40,000
Capital		C's Capital	4,000
A	20,000	Deficiency account	6,000
B	20,000		
	50,000		50,000

A, B and C are equal partners, But C is bankrupt and no amount is realized from his estate. Make final payments to close partner's capital accounts.

பின்வரும் இருப்புநிலைக் குறிப்பு A, B மற்றும் C யுடன் சம்பந்தப்பட்டது. 31.3.2005 ந் தேதியது.

பொறுப்புகள்	ரூ.	சொத்துகள்	ரூ.
கடனீந்தோர்	10,000	வங்கியிருப்பு ரொக்கம்	40,000
முதல்		C's யின் முதல்	4,000
A	20,000	பற்றாக்குறை கணக்கு	6,000
B	20,000		
	50,000		50,000

A, B மற்றும் C ஆகியோர் சரிசம கூட்டாளிகள் ஆனால் C நொடிப்பு நிலை அடைகிறார். மேலும் அவர் எந்த தொகையும் அளிக்க இயலாது. கூட்டாளிகளின் முதல் கணக்குகளில் இறுதி செலுத்தும் தொகையினைக் காண்க.

19. From the following, distribute cash under proportionate capital method:

Capital of partners A – Rs. 20,000; B – Rs. 10,000

Profit sharing ratio : 3 : 2

First Installment (Cash) Rs. 5,000

Second Installment (Cash) Rs. 2,000

Third Installment (Cash) Rs. 1,000

பின்வருவனவற்றிலிருந்து ரொக்க பகிர்மானத்தினை விகிதாச்சார முதல் முறையில் அளிக்கவும்.

கூட்டாளிகளின் முதல் A – ரூ. 20,000; B – ரூ.10,000

இலாப பகிர்வு விகிதம் : 3 : 2

முதல் தவணை (ரொக்கம்) ரூ. 5,000

இரண்டாம் தவணை (ரொக்கம்) ரூ. 2,000

மூன்றாம் தவணை (ரொக்கம்) ரூ. 1,000

SECTION C — (3 × 10 = 30 marks)

Answer any THREE questions

20. Indian traders, Bombay opened a branch at Baroda on 1.1.2008. The following information is available in respect of the branch for the year 2008.

	Rs.
Goods sent to branch	75,000
Cash sales at branch	50,000
Credit sales at the branch	60,000
Salaries	15,000
Office expenses	12,000
Cash remittance to branch towards petty cash	6,000
Closing petty cash	500
Closing debtors	5,000
Closing stock	27,000

Prepare branch account to show the profit or loss from the branch for the year 2008.

இந்தியன் டிரேடர்ஸ், மும்பையில் உள்ளது அது அதன் கிளை ஒன்றினை பரோடாவில் 1.1.2008 ல் துவங்கியது. 2008 ம் ஆண்டுக்குரிய கிளையின் தகவல்கள் பின்வருமாறு.

	ரூ.
கிளைக்கு அனுப்பிய சரக்கு	75,000
கிளையின் ரொக்க விற்பனை	50,000
கிளையின் கடன் விற்பனை	60,000
சம்பளம்	15,000
அலுவலக செலவுகள்	12,000
சில்லறை ரொக்கம் கிளை பெற்றது	6,000
இறுதி சில்லறை ரொக்கம்	500
இறுதி கடனாளிகள்	5,000
இறுதி சரக்கிருப்பு	27,000

கிளைக் கணக்கினை தயாரித்து 2008 ம் ஆண்டுக்குரிய கிளையின் லாபத்தினைக் காண்க.

21. Explain the advantages of departmental accounting.
துறைவாரி கணக்கியலின் நன்மைகளை விளக்குக.

22. Distinguish between Hire purchase and Instalment system.
வாடகை கொள்முதல் மற்றும் தவணை முறைக்கும் இடையே வேறுபடுத்துக.

23. A and B are partners in a firm. They share profits and losses in the ratio of 3 : 1. Their Balance Sheet is as follows :

Liabilities	Rs.	Assets	Rs.
Capital – A	80,000	Buildings	1,00,000
B	40,000	Plant	25,000
Reserve	40,000	Stock	40,000
Creditors	60,000	Debtors	70,000
Bills Payable	20,000	Cash	5,000
	2,40,000		2,40,000

C is admitted into partnership for 1/5th share of the business on the following terms:

(a) Buildings is revalued at Rs. 1,20,000

(b) Plant is depreciated to 80%

(c) Provision for bad debts is made at 5%

(d) Stock is revalued at Rs. 30,000

(e) C should introduce 50% of the adjusted capitals of both A and B. Open various accounts and the new balance sheet after the admission of C.

A மற்றும் B ஆகியோர் ஒரு நிறுமத்தில் கூட்டாளியாக உள்ளனர். அவர்கள் லாப நட்டங்களை 3 : 1 எனும் விகிதத்தில் பகிர்ந்து வந்தனர். அவர்களின் இருப்பு நிலைக் குறிப்பு பின்வருமாறு.

பொறுப்புகள்	ரூ.	சொத்துக்கள்	ரூ.
முதல் – A	80,000	கட்டிடங்கள்	1,00,000
B	40,000	பொறி	25,000
காப்பு தொகை	40,000	சரக்கிருப்பு	40,000
கடனீந்தோர்	60,000	கடனாளிகள்	70,000
செலுத்துதற்குரிய மாற்றுச்சீட்டு	20,000	ரொக்கம்	5,000
	2,40,000		2,40,000

வணிகத்தில் C என்பவரை பின்வரும் நிபந்தனைக்குட்பட்டு 1/5 பங்கிற்கு சேர்த்துக் கொண்டனர்.

(அ) கட்டிடம் ரூ. 1,20,000 என மதிப்பிடப்பட்டது

(ஆ) பொறியின் மீது தேய்மானம் 80%

(இ) வராக்கடன் மீது ஒதுக்கு 5%

(ஈ) சரக்கிருப்பு ரூ. 30,000 என மறுமதிப்பீடு செய்யப்பட்டது.

(உ) C தனது முதல் தொகையாக A மற்றும் B ஆகியோரின் சரிக்கட்டப்பட்ட முதல் தொகையில் 50% செலுத்த வேண்டும். பல்வேறு கணக்குகளை தொடங்கி மற்றும் C சேர்க்கைக்குப்பிறகு உள்ள இருப்பு நிலைக் குறிப்பையும் தயார் செய்க.

24. A, B and C are in partnership sharing profits and losses in the proportion of 4 : 3 : 2. Their balance sheet on December 31, 2006 stood as follows.

Liabilities	Rs.	Assets	Rs.
Creditors	3,500	Cash	1,500
Capital		Debtors	1,000
A	4,000	Stock	2,000
B	2,000	Land and Buildings	5,500
C	500		
	10,000		10,000

They agree to dissolve partnership as from 31st December 2006. 'A' agrees to take over the stock at a valuation of Rs. 1,500 and the debtors at a valuation of Rs. 700 (no cash passes). The land and building are sold at auction for Rs. 2,700. Close the books of the firm.

A, B மற்றும் C ஆகியோர் கூட்டாண்மையில் லாப நட்டங்களை 4 : 3 : 2 எனும் விகிதத்தில் பகிர்ந்து வந்தனர். அவர்களின் 31.12.2006 த் தேதிய இருப்பு நிலைக் குறிப்பு பின்வருமாறு.

பொறுப்புகள்	ரூ.	சொத்துக்கள்	ரூ.
கடனீந்தோர்	3,500	ரொக்கம்	1,500
முதல்		கடனாளிகள்	1,000
A	4,000	சரக்கிருப்பு	2,000
B	2,000	நிலம் மற்றும் கட்டிடம்	5,500
C	500		
	10,000		10,000

அவர்கள் 31.12.2006 ல் கூட்டாண்மையை கலைக்க ஒப்புக் கொண்டனர். A என்பவர் சரக்கிருப்பை ரூ. 1,500 எனவும் கடனாளிகள் மதிப்பினை ரூ. 700 (ரொக்கம் அளிக்கப்படவில்லை) என மதிப்பிட்டு எடுத்துக் கொண்டார். நிலம் மற்றும் கட்டிடம் ரூ. 2,700 என ஏலமிடப்பட்டது. நிறும ஏடுகளை முடிக்கவும்.

———————